சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. 677 / 2019

மனுதாரர் / எதிர்மனுதாரர் ம.சா.1 வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திரு.முத்து அவர்களால் 44/1969 பிரிவின்படி 01.11.2021 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ரகுநாதன் | கிராமம் | : |
| த/பெ | : துரைப்பாண்டியன் | வட்டம் | : |
| மதம் | : | தொழில் | : |
| ஜாதி | : | வயது | : |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. முதல்தகவல் அறிக்கை உண்மை நகல் - ம.சா.ஆ.1

2. விடுவிப்புச் சான்று அசல் - ம.சா.ஆ.2

3. மனுதாரரின் தொடர்சிகிச்சை மருத்துவக் குறிப்புகள் அசல் - ம.சா.ஆ.3

4. ஆதார்அடையாள அட்டை நகல் - ம.சா.ஆ.4 (அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது)

5. புகைப்படம் - ம.சா.ஆ.5

6. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு நகல் - ம.சா.ஆ.6

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்து தொடர்பாக நான்தான் காவல்துறையில்புகார் கொடுத்தேன். அடையாளம் தெரியாத வாகனம் என்மீது இடித்ததாக நான் புகார் கொடுத்துள்ளேன். அடையாளம் தெரியாத வாகனத்தின் மீது தான் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்சரிதான். அடையாளம் தெரியாத வாகனம் என்மீது மோத விபத்தை ஏற்படுத்தியதால் அடையாளாம் தெரியாத வாகனமும் அதன் காப்பீடு நிறுவனமும்தான் எனக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும், 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. எனது புகார் மனுவில் அடையாளாம் தெரியாத வாகனம் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் வந்து என்மீது மோதியதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதனால் தவறு செய்யதாக நான் சென்ற வாகனத்தை ஓட்டிச் சென்ற ஓட்டுநரும் அதன் உரிமையாளரும் அந்த வாகனத்தன் காப்பீட்டாளரான 2ம் எதிர்மனுதாரரும் நஷ்டஈடு வழங்க கடமைப்பட்டவர்

அல்ல என்றால்சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் பரிபூரணமாக குணமாகிவிட்டது அதனால் எனக்கு எந்த வித இழப்பும் ஊனமும் இல்லை என்றால் சரியல்ல. நான் மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனது வருமான இழப்பை நிரூபிக்கக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்சரியல்ல. நான் சென்ற வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்கோரியுள்ள நஷ்டஈடு எனக்கு கிடைக்கத்ததக்கதல்ல என்றால்சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடிக்குரியது என்றால்சரியல்ல.

ஒம்/ ரகுநாதன்,

ஒம்/M.சண்முககனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.